# கர்பநிலை வாய் ஆரோக்கியத்தை பாதிக்குமா?

## கர்பநிலையில் வாய் ஆரோக்கியம்

### பல்லையும் பல்லீறலையும் கர்பநிலையில் ஆரோக்கியமாய் வைத்திருப்பது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் பல நன்மைகளை அளிக்கும்.

கர்பநிலையில் உங்கள் உடம்பு பல மாறுதல்களை காணும். இதில் சில உங்கள் பல் மற்றும் பல்லீறலை பாதிக்கலாம்.

- ஹார்மோண் மாற்றங்களால் பல்லீறல் வீங்கி பல் தேய்க்கும்பொழுது இரத்தம் கசியலாம்.
- ஆரோக்கிய பற்களும் பல்லீறளும் பருவத்திற்கு முன்திய பிரசவம் அல்லது குறைந்த எடையுள்ள குழந்தை பிரசவம் போன்ற அபாயத்தை தடுக்கும்.
- காலை வாந்தி வயிற்றிலுல்ல அமிலங்களை வாயில் விட்டுவிடலாம். இந்த அமிலங்கள் பற்களின் மேல்புறத்தை பாதித்து பல் அழிவை உயர்த்தும்.



## தங்களை தாமே உதவிக்கொள்ளலாம்

உங்கள் வாய் ஆரோக்கியத்தை காப்பது எப்பொழுதுமே ஒரு நல்ல எண்ணம். கர்ப நிலையில் குறிப்பாக சிலவற்றை கடைப்பிடிக்கலாம்.

- வாயை சுத்தமாக வையுங்கள். தினசரி இருமுறை ஃபுலுரைட் பற்பசையினால் பல் தேய்க்கவும்.
- தினமும் பல் மற்றும் பல்லீறலில் தேங்கியவையை நீக்க ஃபளாஸ் செய்யவும்.
- ஆரோக்கியமுள்ள சத்துள்ள உணவையே சாப்பிடுங்கள். இனிப்புகளை தவிர்க்கவும்.
- சாதாரண சுட்ட ரொட்டி அல்லது உப்பில்லாத பிஸ்கெட்டை காலை எழும்பும் முன் சாப்பிட முயலுங்கள். இது காலை வாந்தியை தடுக்கும்.
- எப்படியும் வாந்தியெடுத்தால், வாயை தண்ணீராலோ ஃபுளுரைட் வாய் நீராலோ அலம்பவும்.
- வாய் ஆரோக்கியத்தைப்பற்றி ஏதும் கேள்வி இருந்தால் உங்கள் பல் நோய் மருத்துவர் அல்லது பல் ஆரோக்கியனரை அணுகவும்.

## பல் நோய் மருத்துவர்கள் கர்பினிகளுக்கு பிரத்தியேக பராமரிப்பு அளிக்கத்தக்கவர்கள்.

உங்கள் பல் நோய் மருத்துவரும் பல் ஆரோக்கியனறும் உங்கள் கர்ப நிலை பல் ஆரோக்கியத்திர்க்கான பிரத்தியேக பயிற்சி பெற்றுள்ளனர்.

- பல் நோய் மருத்துவரிடம் தாங்கள் கர்பினி என்று தெரியப்படுத்துங்கள்.
- ஓழுங்கான பல் சுத்தம் செய்தலும் சரி பார்த்தலும கர்ப காலத்தின் முன்னும் பின்னும், கர்பத்தின்பொழுதும் மிக்க முக்கியம்.
- அவசரத்தில் தேவைப்படாத எக்ஸ்–கிரணத்தை பிரசவத்திர்க்கு பிறகு ஒத்தி வைக்கவும்.
- ஒருபொழுது உங்கள் பல் நோய் மருத்துவர் எக்ஸ்–கிரணம் எடுத்தே ஆக வேண்டும் என்று கருதினால், அவர் அதன் குறைந்தபட்ச வெட்பக்கதிர் வீச்சலில் இருந்து உங்களையும் குழந்தையையும் பாதுகாக்க ஈய மேல் ஆடை உபயோகப்படுத்துவார்.
- மருந்து மாத்திரைகளை கர்ப காலத்தில் தவிர்க்கவும். அவசர பல் சிகிச்சையினால் மருந்து சாப்பிட வேண்டுமென்றால், கண்டிப்பாக அவை பற்றி உங்கள் பல் நோய் மருத்துவரிடமும் மற்றைய சிகிச்சரிடமும் விசாரிக்கவும்.



மேலும் தகவலுக்கு அணுகவும்:
இன்ஃபோ லைன் 1-800-268-1154
ரொரன்ரோவிலிருந்து 416-314-5518
காது கேலாதவர்களுக்கு 1-800-387-5559
இங்டெர்நெட் www.gov.on.ca/health

**For information in English, contact:**
**1-800-268-1154 – Toronto 416-314-5518**
**TTY 1-800-387-5559**
**www.gov.on.ca/health**

**Based on materials developed by the City of Ottawa, People Services Department**

7610-6134100 TAMIL 40M March 2002
© 2002 Queen's Printer for Ontario

ஆரொக்கிய கவனிப்பு உங்களக்கு அளிக்க

Ontario Early Years